## சுருக்கம்

வேளாண்மை – சிறப்பு விருது – 2012–13ம் ஆண்டில் நெல்(மானாவாரி), சிறுதானியங்கள், பயறுவகைகள் சாகுபடியில் அதிகமான மகசூல் பெற்ற விவசாயிகளுக்கு சிறப்பு பரிசு 2014ம் ஆண்டு குடியரசு தினத்தன்று வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### வேளாண்மை(வே.உ.2)துறை

### திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 8

அரசாணை(நிலை)எண். 16 நாள்: 21.01.2014

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை(நிலை)எண்.191 வேளாண்மை(வே.உ.2)துறை நாள். 05.09.2012
2. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.நெ & சி2/55250/12 நாள்.5.08.2013, 21.10.2013, 28.11.2013,06.01.2014.

---------

**ஆணை:–**

பல்வேறு பகுதிகளுக்கு உகந்த பயிர்களை கண்டறிவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, உணவு தானியத்தில் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளுக்கு சிறப்பு பரிசு வழங்கப்படும் என மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்புக்கிணங்க மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், நெல் (மானாவாரி), சாமை (மானாவாரி), சோளம்(மானாவாரி), சோளம்(இறவை), கேழ்வரகு (மானாவாரி), கேழ்வரகு(இறவை), துவரை(மானாவாரி), துவரை(இறவை), பச்சை பயறு(மானாவாரி), பச்சை பயறு(இறவை), உளுந்து(மானாவாரி), உளுந்து(இறவை) ஆகிய பயிர்களின் சாகுபடியில் அதிகமான மகசூல் பெறும் விவசாயிகளை தேர்வு செய்து முதல் பரிசாக ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) இரண்டாம் பரிசாக ரூ.25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மூன்றாம் பரிசாக ரூ.10,000/–(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் சிறப்பு விருதுக்கு திட்டமிடப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூ.10,20,000/– மற்றும் பயணப் படிக்கு திட்டமிடப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூ.1,20,000/– என இவ்விருதுகள் வழங்குவதற்கு மொத்தம் ரூ,11,40,000/– (ரூபாய் பதினொரு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. அவ்வரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி போட்டியில் கலந்து கொண்டு, 2012–13ம் ஆண்டிற்கான பயிர்வாரியாக அதிக மகசூல் பெற்ற விவசாயிகளின் பட்டியல் தேர்ந்தெடுக்கப்பட்டு தரம் அடிப்படையில் அதாவது முதல் பரிசு ரூ.50,000/–, இரண்டாம் பரிசு ரூ.25,000/– மற்றும் மூன்றாம் பரிசு ரூ.10,000/– வழங்க வேளாண்மை இயக்குநரால் பரிந்துரை செய்து 17 விவசாயிகளின் பட்டியலை அரசுக்கு அனுப்பியுள்ளார். தனது கருத்துருவில் நெல், சிறுதானியங்கள் பயறுவகைகள் சாகுபடியில் அதிக மகசூல் பெற்றுள்ள நான்கு விவசாயிகளுக்கு 2014 ஆம் ஆண்டு குடியரசு தினவிழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பரிசுத்தொகை வழங்கலாம் எனவும், ஏனைய 13 விவசாயிகளுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் குடியரசு தின விழாவில் சிறப்பு பரிசு வழங்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

3. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள் சாகுபடியில் அதிக மகசூல் பெற்றுள்ள விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக, பின் வரும் விவசாயிகளுக்கு அவரவர் பெயர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள விவரப்படி 26.01.2014 அன்று நடைபெறும் 2014ஆம் ஆண்டு குடியரசு தினவிழாவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் மூலம் சிறப்பு பரிசுகள் வழங்கலாம் என அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | விவசாயியின் பெயர் மற்றும் முகவரி | பரிசுபெறும் பயிர் | அறுவடை நாள் | மகசூல் (கிகி/ எக்டர்) | பரிசு | பரிசு தொகை ரூபாய் |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரு.சீ.அரிதாஸ், விருத்தாசலம், கடலூர் | நெல் (மானாவாரி) | 30.01.2013 | 7177.50 | I | 50,000 |
| 2 | திரு.கே.முருகேசன், பென்னாகரம், தருமபுரி | இராகி(இறவை) | 14.03.2013 | 6105 | I | 50,000 |
| 3 | திரு.கே.மணி, போளூர், திருவண்ணாமலை | சாமை(மானாவாரி) | 24.12.2012 | 3980 | I | 50,000 |
| 4 | திரு.எம்.இராமலிங்கம், குறிஞ்சிப்பாடி, கடலூர் | பச்சைபயறு(இறவை) | 4.03.2013 | 3270 | I | 50,000 |
| 5 | எஸ். கந்தன்,பாலக்கோடு, தருமபுரி | இராகி GPU28(மா) | 13.12.2012 | 3260.13 | I | 50,000 |
| 6 | சி.மாது, தருமபுரி, தருமபுரி | சோளம் கோ19(மா) | 24.12.2012 | 1815 | I | 50,000 |
| 7 | கே.மணி, நல்லாம்பள்ளி வட்டாரம்,தர்மபுரி மாவட்டம் | துவரை(மா) | 20.12.2012 | 2865 | I | 50,000 |
| 8 | கோ.வேடியப்பன், அரூர்,தர்மபுரி மாவட்டம் | துவரை(இறவை) | 23.01.2013 | 5122.5 | I | 50,000 |
| 9 | கு.குணசேகரன், பாப்பிரெட்டிபட்டி, தர்மபுரி மாவட்டம் | உளுந்து | 15.11.2012 | 1050 | I | 50,000 |
| 10 | கே.செட்டி தருமபுரி,தருமபுரி | இராகி GPU28(இ) | 19.12.2012 | 2987 | II | 25,000 |
| 11 | டி.தெய்வானை, தருமபுரி,தருமபுரி | இராகி GPU28(மா) | 28.12.2012 | 2338 | II | 25,000 |
| 12 | எல்.தேவராஜ்,அரூர்,தருமபுரி | சாமை CO4(மா) | 08.11.2012 | 3945 | II | 25,000 |
| 13 | கி.சண்முகம், பாலக்கோடு,தர்மபுரி | துவரை(மானாவரி) | 12.01.2012 | 2848 | II | 25,000 |
| 14 | செ.கந்தசாமி, பாலக்கோடு,தர்மபுரி | துவரை(இறவை) | 07.02.2013 | 3997.5 | II | 25,000 |
| 15 | கே.கோவிந்தன், போளூர், திருவண்ணாமலை | சாமை(மா) | 26.12.2012 | 3650 | III | 10,000 |
| 16 | கோ.கோவிந்தசாமி, காரிமங்கலம், தர்மபுரி | துவரை(மானாவரி) | 18.01.2013 | 1822.6 | III | 10,000 |
| 17 | சி.ரங்கநாதன், பென்னாகரம், தர்மபுரி | துவரை(இறவை) | 06.02.2013 | 3520 | III | 10,000 |

4. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு முதல் பரிசாக ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) இரண்டாம் பரிசாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மூன்றாம் பரிசாக ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்குவதற்கு பரிசுத்தொகை

ரூ.6,05,000/–ம், மற்றும் பயணச் செலவுகள் வகைக்கு ரூ.1,20,000/–ம் ஆக மொத்தம் ரூ.7,25,000/– (ரூபாய் ஏழு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

“ 2401–00–பயிர் வளர்ப்பு – 109 விரிவாக்கப் பணியும் உழவர் பயிற்சியும் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள்– II மாநிலத்திட்டம் – KI – திருந்திய முறை நெல் பயிரிடுதலில் மிக அதிமான நெல் விளைச்சலை ஈட்டும் விவசாயிக்கு சிறப்பு விருது வழங்குதல்”

| | | |
|---|---|---|
| i) | 04–பயணச்செலவுகள் –01 சுற்றுப்பயணப்படிகள் (து.தொ.கு.2401–00–109– KI-0416) | -ரூ. 1,20,000 |
| ii) | 59 பரிசுகளும் வெகுமதிகளும் (து.தொ.கு.2401–00–109– KI-5902) | -ரூ 6,05,000 |
| | மொத்தம் | ரூ. 7,25,000 |

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் வரும் 2013–2014 இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள வேளாண்மை இயக்குநர் சென்னை–5 அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகின்றது. மேலும் 2013–2014 இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித்(வேளாண்)துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்புமாறு வேளாண்மை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்விருதுக்கு விண்ணப்பிக்கும் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் பதிவுக் கட்டணம் கீழ்கண்ட வரவின தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும்.

“0401–00 – பயிர்வளர்ப்பு – 800– இதர வரவினம் – AJ- பயிர்விளைச்சல் போட்டி (து.தொ.கு 0401–00–800– AJ-009).

8. மேலே பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள விவசாயிகளுக்கு பயணப்படி செலவினத் தொகையினை வேளாண்மை இயக்குநர் பெற்று சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மூலமாக வழங்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

9. இவ்வாணை நிதித்துறையின் அ.சா..எண். 2667/DS(VS)/2013 நாள். 21.01.2014 பெறப்பட்ட ஒப்புதலுடன் மற்றும் கூடுதல் பேரேட்டு பக்க எண்.2681 (இரண்டாயிரத்து அறுநூற்று எண்பத்தொன்று )வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்,</u>
வேளாண்மை இயக்குநர், சென்னை–5.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை–18/(பெயரில்).

மாநிலக் கணக்காயர், சென்னை–18/(பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–8(கிழக்கு).
மாவட்ட ஆட்சியர்கள்,திருவண்ணாமலை, கடலூார் மற்றும் தர்மபுரி.
தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காயர் அலுவலகம், ( பொது சமூகத்தணிக்கைப் பிரிவு), சென்னை–9.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.

<u>நகல்:–</u>

பரிசு பெற்ற விவசாயிகள்,
வேளாண்மை இயக்குநர், சென்னை–5(வழியாக)
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர், சென்னை–9.
வேளாண்மை(பொது/வ & தி)துறை, சென்னை–9.
பொதுத்துறை, சென்னை–9.
வேளாண்மை (அநமு3)துறை, சென்னை–9 (அட்டவணைப் படுத்தும் வகைக்கு)
நிதித் (வேளாண்மை/வரவு செலவு/பொது–II )துறை, சென்னை–9.
திட்டம் வளர்ச்சி (ம) சிறப்பு செயலாக்கத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரிகள்.

**(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)**

பிரிவு அலுவலர்
24/1/14